# செம்மணி

நிலம் 3 துகள் 137 வள்ளுவர் ஆண்டு 2052,  04 - 10 பங்குனி 2023 வாரமலர் பக்கங்கள் 14


# ஐக்கிய மக்கள் சக்தியா? ஜே.வி.பி.யா...?



1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியன்று இலங்கையின் நாடாளுமன்றுக்குள் கைக்குண்டுகள் 2 வீசப்பட்டன. ஜே.வி.பி. அமைப்பின் படைப்பிரிவான தேசப் பிரேமி ஜனதா வியாபாரய (தேசாபிமான மக்கள் இயக்கம்) என்ற அணியைச் சேர்ந்தவர்களாலேயே அவை வீசப்பட்டன. அதன் நோக்கம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட அப்போதைய அரசதலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த் தனாவைக் கொல்வதாகும். வரலாறு இப்படியிருக்க, 13ஆம் திருத்தத்துக்கு நாம் ஆதரவாக இருக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் கந்துநெட்டி.

இலங்கையில் உள்ள சிங்களக் கட்சிகளில் தமிழர் மீது அதிக இனத்துவேசம் கொண்ட கட்சி ஜே.வி.பி. ஜே.ஆர்.ஜெயவர்த் தனவுக்குக் கைக்குண்டு வீசிய காலத்திலிருந்து ஒரே நிலைப் பாட்டிலேயே அவர்கள் உள்ளனர். 1989 காலப்பகுதியில் ஜே.வி. பியைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் 65ஆயிரம்பேர் ரணசிங்க பிரேமதாசவின் தலைமையில் கொல்லப் பட்டனர். ஜெ.ஆர். ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி அந்தப் பழி சற்று இடம்மாறி பிரேமதாசவின் மகனின் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீது பாய்ந்தி ருக்கிறது. பிரேமதாச காலத்து ஐ.தே.க. தலைவர்கள் பலர் சஜித்து டன் கூட்டுச் சேர்த்தி ருப்பதும் இதற்கு இன் னோர் காரண மாகும்.



ஆரணன்

**அசாதாரண அமைதிக்கு என்ன காரணம்...?**

ஜே.வி.பி.யும் ஐக்கிய மக்கள் சக்தியுமே நடக்கவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. மகிந்த - ரணில் கூட்டை உடைத்துத் தாமே ஆட்சியமைப்போம் என்றும் இவ் விரு கட்சிகளும் சொல்கின்றன. இவ்விரு கட்சிகளும் யாழ்ப்பாணத்தில்கூடத் தமிழ் மக்களின் ஆதரவு தமக்கு உள்ளது என்று காட்டுவதற்காகப் பஸ் நிலையப் போராட்டங்கள், இசை நிகழ்ச்சிகள் எனப் பல சித்து விளையாட்டுக்களைக் காட்டி ஊடகங்களில் இடம்பி டித்து வருகின்றன. இந்தக் கூட்டங்களில் பங்கு பற்று பவர்களில் பெரும்பாலான மக்கள் வேறு பகுதிகளில் இருந்து பஸ்களில் ஏற்றியிறக்கப்படுகின்றனர். இலங் கையில் அடுத்து ஆட்சியமைக்கப் போவது யார் என்கிற கேள்வி எழுந்திருக்கிற நிலையில் ஐ.தே. காவும் பொது ஜன பெரமுனவும் எதிர்வரும் தேர்தலைக் குறிவைத்து இதுவரையில் தமது கட்சி அலுவல கங்களைத் திறக்கவோ பரப்புரை களில் ஈடுபடவோ இல்லை. அவர் களின் அசாதாரண அமைதிக்கு என்ன காரணம் என்பது பலரது கேள்வியாக இருக்கிறது.

**இரு துருவங்கள்**

இப்போதைக்குத் தேர்தல் இல்லை என்ற தீர்மானம் அரசிடம் இருப்ப தால்தான் அதுபற்றி அலட்டிக் கொள்ளாதுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் சொல்கின்றன. அவர்களது உள்நோக் கம் தேர்தலைப் பிற்போடுவதுதான் என மேற்படி இரு கட்சிகளும் பரப் புரைகளைச் செய்து வருகின்றன. அத்தோடு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்றும் போராட் டங்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றன. ஆனாலோ ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இவ்விரு கட்சிகளும் நேர் எதிரான அரசியல் சித்தாந்த வழியைப் பின்பற்றுபவை. அதனால் இவை இரண்டும் இணைந்து எதிர்காலத்தில் ஆட்சியமைக்கும் வாய்ப்பு உள்ளூரட்சி மன்றங்களில் கூட இல்லை. இந்த இரண்டு துருவங் களைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனி வழியில் நிற்கிறது. டலஸ் அணி இன்னோர் முன்னெடுப்பை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய ஒற்றுமையற்ற எதிர்க்கட்சிகள் இனிமேல் எத்தனை உருவாகினாலும் அது மகிந்த தரப்புக்கும் ரணிலுக்கும் சாதகமானதாகவே இருக்கப் போகிறது.

**ஜே.வி.பி.யின் அயற் கொள்கை**

ஜே.வி.பி.யானது இந்தியாவையும் எதிர்க்கிறது சீனவையும் எதிர்க்கிறது. ஏனைய முதலாளித்துவ நாடுகளையும்கூட எதிர்க்கிறது. நிலமை இவ்வாறிருக்க ஜே.வி.பி.யினரின் கையில் இலங்கையின் ஆட்சி மாறினால் பெரும் தனவந்தர்களான சிங்களவர்களுக்கு அது ஆபத்தாகும் என்று உரைக்கப்பட்டுவிட்டது. லஞ்சம், ஊழல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவதுடன் அவர்களது சொத்துகள் பொதுவு டமையாக்கப்பட வாய்ப்புண்டு என்றும் சொல்லப்பட்டு விட்டது. இது ஜே.வி.பியின் சித்தாந்தத்துக்குப் பொருந்தினாலும் நடைமுறையில் சாத்தியப்படப் போவதில்லை. இவர்களின் இந்த முன்னறிவிப்பானது ஊழல்வாதிகளையும் முறைகேடாகச் சொத்துச் சேர்த்த வர்களையும் அரசியல்வாதிகளையும் விழிப்படையச் செய்துள்ளது. இது ஜே.வி.பி வெற்றிக்குத் தடையாகவே அமையும். ஊழல்வாதிகள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறேன் என்றும் அதற்குப் பொறுப்பாக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை நியமிக்கவுள்ளேன் என்றும் சஜித் பிரேமதாசவும் ஜே.வி.பிக்குச் சற்றும் சளைக்காமல் கூறி வருகிறார். இது சஜித் அணியின் வெற்றிக்குத் தடையாக இருக்கும். இத்தகைய முன்னறி வித்தல்கள் மகிந்த - ரணில் தரப்புகளை உசார்ப்படுத்தி இருக்கின்றன.


**ஜே.வி.பி.யானது இந்தியாவையும் எதிர்க்கிறது சீனவையும் எதிர்க்கிறது. ஏனைய முதலாளித்துவ நாடுகளையும்கூட எதிர்க்கிறது. நிலமை இவ்வாறிருக்க ஜே.வி.பி.யினரின் கையில் இலங்கையின் ஆட்சி மாறினால் பெரும் தனவந்தர்களான சிங்களவர்களுக்கு அது ஆபத்தாகும் என்று உரைக்கப்பட்டுவிட்டது**

**பணமும் மதுபானமுமே இறுதியில் வாக்களிக்கும்**

தேர்தலுக்கு முன்னதாக எத்தகைய பரப்புரைகளை மேற்கொண்டாலும் தேர்தலன்று வாக்காளர்களின் கைகளுக்குக் கிடைக்கும் மதுவும் பணமும் காலை இடம்பெறும் வாக்களிப்பைத் தீர்மாhனிக்கும். நீண்ட காலம் அரசியலில் இருப்பவர்கள் அவர்களின் குடும் பங்களை மாத்திரம் வெற்றிபெறச் செய்வதில்லை. அவர்களை அண்டிப் பிழைக்கும் பெரிய வலைப்பின் னலே தேர்தலைத் தீர்மானிக்கிறது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் சாதாரண மக்களைப் பாதிப்பதாக இருந்தாலும் அவற்றால் பாதிக் கப்படாத ஒரு கூட்டமே அரசியலைத் தீரு;மானிக்கும் சக்தியாக உள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பி. - ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன இணைந்தால்கூட மகிந்த - ரணில் கூட்டுக்கு மாற்றாக இருக்க முடியாது என்கிற சூழலில் இவ்விரண்டு தரப்புகளும் பிரிந்து நின்று வீணே முறிந்து வீழ்வது எவ்வித பயனையும் தராது என்பதே நிஜம்.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

14




"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

உள்ளனவேயாயினும் இறுதி அர்த்தத்தில் ஒற்றையாட்சி முறைக்குச் சேவை செய்யவல்லனவாகவே உள்ளன.

இத்திட்டம் தமிழருக்குத் திருப்தியளிக்கவல்லன அல்ல என்பது ஒருபுறமிருக்க இத்தீர்வை முன்வைத்த முறை மிகவும் கவனத்துக்குரியது. இதை ஒரு தனித் தீர்வாக அல்லாமல் ஐ.தே.க ஏற்றுக்கொள்ள விரும்பாத மொத்த யாப்பு மாற்றங்களுடன் இதை இணைத்து முன்வைத்ததன் மூலம் ஐ.தே.க.வால் யாப்பு நிராகரிக்கப்படும்போது அதனுடன் இணைந்து இதுவும் நிராகரிப்புக்கு உள்ளாக முடியும் என்ற உள்நோக்கம் தொனிக்கிறது. அதாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க ஐ.தே.க. ஆதரவளிக்காது என்பது தெரிந்ததே. அத்தகைய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பின் கீழ் இப்பிராந்திய சபை அமைக்கும் தீர்வை முன்வைத்தமை குறளிவித்தையைவிடவும் மோசமான ஏமாற்றேயாகும்.

சிங்கள உயர்குழாத்து அரசியல்வாதிகளுக்குத் தமிழ் மக்களின் உரிமைகள் எவ்வளவுக்குப் பொருட்டில்லையோ அவ்வளவுக்கு ஏழைச் சிங்கள இளைஞர்களின் உயிரும் பொருட்டில்லை. சட்டங்களால் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கியதன் அடுத்த கட்டம் பொலிஸ் இராணுவப் படைகளினால் உரிமைகளை நசுக்குவதாகப் பரிமாணம் பெற்றது.

தமிழ் மண்ணில் இராணுவ நடவடிக்கைகளைப் புரிவதால் மக்களுக்கு

ஏற்படும் உயிரிழப்புகள், போராளிக ளுக்கு ஏற்படும் உயிரிழப்புகள், சொத் திழப்புகள், சிங்களச் சிப்பாய்களின் உயிரிழப்புகள் என்பவற்றைப் பற்றி யெல்லாம் சிங்கள உயர்குழாம் கவலைகொள்ளவில்லை என்பதுடன் அவை அவர்களுக்கு மிகவும் ருசி கரமான சூதுப் பொருள்களாகவும் இருந்தன. இத்தகைய துயரங்களும் இழப்புகளும் சிங்கள உயர்குழாத்தின் அரசியல் இருப்பைப் பாதிக்கவில்லை என்பதுடன் அவர்களின் அரசியல் சூதாட்டத்துக்கு இவற்றை அவர்கள் வீம்பூட்டவல்ல பண்டங்களாகவும் ஆக்கிக் கொண்டனர்.

ஆனால், இன ஒடுக்குமுறைகளின் பிரதிபலிப்புகள் தமிழ் மண்ணிற்கு வெளியே குறிப்பாகத் தலைநகர் கொழும்பை நோக்கி விரிவடையத் தொடங்கியமையானது சிங்கள உயர் குழாத்தைச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளியது. மத்திய வங்கி மீதானதும், கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீதானதும் பாரிய தாக்குதல்கள் சிங்கள உயர்கு ழாத்திற்கு நெருக்கடிகளைக் கொடுக் கத் தொடங்கின.

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான பாரிய தாக்குதல் அரசியல், இராணுவ ரீதியில் சிங்கள உயர்கு ழாத்தை முற்றிலும் வியப்பிற்குள்ளாக் கின. பொதுவாகத் தலைநகரில் வெடித்த குண்டுகள் கொழும்மை மட்டு மன்றி சிங்கள உலகையே பீதிக்குள் ளாக்கியதுடன் கொழும்பின் சகஜ வாழ்வையும் பொருளாதாரப் போக் கையும் பெரிதும் குழப்பின.

அமைச்சர் மட்டத்துக்கு மேலான சிங்கள உயர்குழாத்து அரசியல் தலைவர்களின் தலைகள், உயர் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளின் தலைகள் என்பனவெல்லாம் குறி வைக்கப்பட்ட பொருட்களாய் மாறின.

தெருக்களிலும், திறப்பு விழாக்க ளிலும், உல்லாச விடுதிகளிலும், படுக் கையறைகளிலும் இவ்வாறானோரின் தலைகள் குண்டுகளுக்கு இலக்குப் பொருட்களாயின. சுருங்கச் சொன் னால் தலையணைகளே வெடிக்கும் குண்டுகளாயின. இப்பின்னணியுடன் மேலும் தமிழ் மண்ணிலிருந்து தெற் கைச் சென்றடைந்த சிப்பாய்களின் பிரேதங்கள், உடல் சிதலங்களான நிலையில் சீலிடப்பட்ட பிரேதப் பெட்டிகள், வாழைக் குற்றிகளாலும் கற்களாலும் நிரப்பப்பட்டுச் சீல்வைக் கப்பட்ட பிரேதப் பெட்டிகள், சிப் பாய்களின் காணாமல்போனோர் பட் டியல்கள் என்பனவெல்லாம் சேர்ந்து சமாதானம் பற்றிய குரல் தெற்கில் பலம்பெற வழிவகுத்தன.

பனிப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து உருவான புதிய உலகமய மாக்கல் போக்கின் பொருட்டு உள் நாட்டு நெருக்கடிகளையும் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகளையும் கீழ் நிலைப் படுத்தி ஒருவகைச் சமரச அரசியலை ஊக்குவிக்கவேண்டிய அவசியம் ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்டது. இதுவிடயத்தில் முரண்டுபிடிக்கு அரசுகளைத் தீர்வுகளின் பொருட்டு மிதப்படுத்த அரசியல், வர்த்தக, நிதி ஆதார அழுத்தங்களை இவ்வாறான அரசுகள் மீது மேற்குலகம் பிரயோகிக்கும் ஒரு நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கியது.

அத்தகைய நிதி ஆதார நெருக் கடிகளைத் தவிர்ந்த வேறு வழிகளில் தீர்வின் பொருட்டு இலங்கை அர சைப் பணிய வைக்கமுடியாதென்ற நிலை சர்வதேச அரங்கில் உணர வைக்கப்பட்டதன் பின்னணியில் இலங்கை அரசு தீர்வு பற்றிச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளா னது. தமிழ் மக்களின் தவிர்க்கவியலா உரிமை என்ற கோணத்தில் இருந்து இலங்கை அரசு சிந்திக்காமல் சர்வ தேச சமூகத்திடமிருந்து நிதி பெறு வதற்காகத் தீர்வு, சமாதானம் என் றெல்லாம் அரசு சிந்திக்கத் தொடங்கி யது.

(தொடரும்)

---

## இந்த வாரச் சொல்

## குறண்டு, குறண்டி, குறண்டுதல்

குறண்டு என்கிற இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச் சொல்லாகப் பயன் பாட்டிலுள்ளது. மனிதர்களோ, விலங்குகளோ இயல்பான தோற்றத்தைவிடச் சிறிதாகவும் சுருங்கிப் போயுமிருப்பதைக் குறண்டு, குறண்டி என்று அர்த்தப்படுத்துகிறார்கள். அதிக நேரம் நீரில் நனைதல், அதிக குளிரால் பாதிக்கப்படுதல், மழையில் நனைவதால் ஏற்படும் நிலை ஆகியவற்றைப் பொதுவாகக் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். அதைவிடச் சில நோய்களால் ஏற்படும் நிலையாகவும் குறண்டுதல் என்கிற பதம் அர்த்தப்படுத்தப்படுகிறது.

"புலுமைச் சிலந்தி கடித்ததால் கை, கால் எல்லாம் குறண்டிப் போய்ப்படுத்துக் கிடக்கிறான்"

"அந்தப் பிச்சைக்காரன் குளிர் தாங்க முடியாமல் குறண்டிப்போய் இருக்கிறான்"

"அவனுக்குப் பாரிச வாதத்தால் ஒரு கையும் ஒரு காலும் குறண்டிப் போச்சுது"


"அந்தப் பெரிய நாய் குறண்டிக் கொண்டு படுத்துக் கிடந்தால் கண்ணுக்குத் தெரியவில்லை"

"அந்தச் சின்ன வீட்டுக்குள்ள என்னண்டுதான் குறண்டிக் கொண்டு படுக்கிறார்களோ தெரியாது"

"காய்ச்சல் சரியாய்க் கொதிக்கிறதாலை அவன் குறண்டிக் கொண்டு கிடக்கிறான்"

# சிறைக்குள்...

98



# "சிறை உடைந்து விழப்போகிறது"

**29.5.2002**அன்று களுத்துறையிலிருந்து என்னுடன் கண்டி நீதிமன்றத்துக்கு வந்த அருண் கண்டி நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். அவர் கண்டியைச் சேர்ந்தவர். அவரது வீட்டுக்கு விடுதலைப் புலிகள் வந்துபோனதாக யாரோ தகவல் கொடுத்ததால் கைது செய்யப்பட்டவர். மிகவும் சுவாரசியமான பேர்வழி. எந்தநேரமும் சிரித்துக்கொண்டிருப்பார். போகம்பரைச் சிறைக்குள் விபூதி பூசிப் பெரிய சந்தனப் பொட்டு வைத்திருப்பார். எந்நேரமும் வெற்றிலை சப்பிக்கொண்டிருப்பார். அவர் வழக்கு எதுவுமின்றியே கண்டி நீதவான் நீதிமன்றில் விடுதலை செய்யப்பட்டார்.

போகம்பரை டி பிரிவின் கதவுகள் மரத்தால் செய்யப்பட்டவை. அந்தக் கதவுகளை உடைத்து வெளியேறும் திட்டத்தை நாம் களுத்துறையிலிருந்து போகம்பரைக்குச் செல்வதற்கு முன்னர் அங்கிருந்த கைதிகள் போட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்குள் அடைக்கப்பட்டிருந்தவர்கள் தூக்குத் தண்டனை, ஆயுள்காலச் சிறை ஆகிய குற்றவியல் கைதிகளாக இருந்ததால் சிறைக்குள்ளிருந்து எப்படியாவது தப்பி ஓடிவிட வேண்டும் என்று அவர்கள் நினைப்பது இயல்பானது. அவ்வாறு திட்டமிட்டு இரவு நேரம் எல்லாக் கைதிகளும் சேர்ந்து பெரிதாகச் சத்தமிட்டுக் கத்தினார்கள். "கட்டடம் ஆடுகிறது உடைந்து விழப்போகிறது" என்று கத்தினார்கள்.

மேற்படிச் சிறைக் கட்டடம் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட மிகப் பழைய கட்டடம்.

ஏற்கனவே வாள்பிளேற்றினால் அறுத்து வைத்திருந்த கதவுச் சட்டங்களை உடைத்துக்கொண்டு ஓரிரு கைதிகள் வெளியே வந்து ஏனைய கதவுகளையும் உடைத்தார்கள். நிலமையை அறிந்த சிறை நிர்வாகம் உடனடியாகச் செயலில் இறங்கி அதைக் கட்டுக்குள் கொண்டு வந்தார்கள். சிறை அத்தியட்சகர் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து துப்பாக்கியால் சுடும் உத்தரவைப் பிறப்பித்து எல்லாக் கைதிகளையும் நிலத்தில் படுக்க

தர்மராசா

# "இவ்வாறான ஒரு சண்டையை இதற்கு முன்னர் சண்டைத் திரைப்படங்களிலேயே பார்த்திருக்கிறேன்..."

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மன்னகுளம் கிராமத்துக்குள் எமது கொமாண்டோ வேவு அணி புகுந்தபோது அங்கு மக்கள் யாரும் இருக்கவில்லை. ஆனால், இரண்டாவது தடவையாக வேவு அணி அங்கு சென்றபோது அந்தக் கிராமத்தில் புலிகள் இருப்பதை அவதானித்தார்கள். அந்தக் கிழமைக்குள் படையினர் மன்ன குளம் பகுதிக்குள் ஊடுருவுவதற்கு வாய்ப்புள்ளது என்பதைத் திட்டமிட்டுத் தமது பெரிய ஆயுதங்களை முக்கிய இடங்களில் பொருத்தி வைத்துவிட்டுப் புலிகள் காத்திருப்பதை வேவு அணியினர் அவதானித்தனர்.

அந்தக் கிராமத்தில் 5வீடுகளும் ஒரு பாடசாலையும் இருந்தது. எமது நோக்கம் புலிகளைத் தாக்குவது மட்டுமே. அவர்களின் ஆயுதங்களை எடுப்பதல்ல. முதலில் கிராமத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடவே முயன்றோம். அந்தக் கிரமத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டால் அங்கிருந்து கனகராஜன் குளம், மாங்குளம் பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பின்தளமாக மன்னகுளம் கிராமத்தைப் பயன்படுத்தாலாம் என்று வியூகம் அமைத்திருந்தோம்.

வன் - சி.ஆர். அணியானது மன்னகுளம் குளக்கட்டுப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.



**நேருக்கு நேர் மோதல்**

புலிகளுடனான நேருக்கு நேரான மோதலில் எமது சாலிகுறூப் அங்கிருந்த பிரதான பாதையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. எனினும் மேலதிக துருப்புகள் அங்கு வரமுடியாத நிலை இருந்ததால் நேரடி மோதலில் காயப்பட்டவர்களை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. மேலதிக துரப்புகள் உதவிக்கு வராததால் துப்பாக்கி ரவைகளைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் எமது அணி அங்கிருந்து பின்வாங்காது இறுதி ரவை இருக்கும்வரைக்கும் சண்டையிட்டது. ஏற்கனவே நிலத்தில் கொட்டப்பட்டுக் கிடந்த ரவைகளைப் பொறுக்கியெடுத்துப் பல சந்தர்ப்பங்களில் சண்டையிட்டோம்.

புலிகள் நாம் நின்ற இடங்களை நோக்கிக் கடுமையான மோட்டார் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டார்கள். நாம் களத்தில் இறங்கிய நேரத்திலிருந்து பல கொமாண்டோக்கள் காயப்பட்டார்கள். காயப்பட்டவர்களைப் பின்னால் அனுப்பமுடியாத நிலை தொடர்ந்தும் காணப்பட்டது.


வைத்துக் கைவிலங்கிட்டு உடனடியாக எல்லோரையும் வெளியில் எடுத்து வெலிக்கடை, மகர சிறைச்சாலைகளுக்கு அனுப்பினார். போகம்பரைக் கைதிகள் எவருக்கும் அங்கு வைத்து அடிக்கவில்லை. எஸ்கொட்டில் சென்று ஏனைய சிறைகளில் இறங்கியபோது செங்கம்பள வரவேற்பாகக் கடும் அடி விழுந்தது என்று அறிய முடிந்தது.

இந்தச் சிறை உடைப்புடன் மாத்திரம் நின்றுவிடாது சிறையின் எல்லாக் கதவுகளையும் திறக்கும் ஒற்றைத் திறப்பைச் சவர்க்காரத்தில் அச்சுப் பதித்து போலித் திறப்புகள் இரண்டைக் கைதிகள் செய்திருக்கிறார்கள். அதில் ஒன்று சிறை அதிகாரிகளால் மீட்கப்பட்டது. மற்றையது மீட்கப்படவில்லை.

30.5.2002காலை 5.30 மணிக்கு அனுராதபுரச் சிறைக்குச் செல்வதற்குத் தயாராகும்படி சிறை அதிகாரிகள் கூறினார்கள். காலை 8.30 மணியளவில் போகம்பரைச் சிறையை விட்டு வெளியே எடுத்தார்கள். அன்றுடன் எனக்குப் போகம்பரைச் சிறை வாழ்க்கை முடிந்தது. அது பெரிய நிம்மதியாக இருந்தது. பகல் 12.30 மணியளவில் அநுராதபுரத்தைச் சென்றடைந்தோம். அங்கிருந்த ஈ2 பிரிவில் 31 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம்.

மறுநாள் திருகோணமலை நீதிமன்றத்துக்குப் போகவேண்டியிருந்தது. உடுப்புகள், பைகளைப் பரிசோதனை ஊழியர் கசக்கிவிட்டார். சந்திரன் என்ற புதுக்குடியிருப்பு நண்பர் அன்றிரவு எனது சேர்ட்டையும் ரவுசரையும் பாயில் வைத்து ஒழுங்காக மடித்து அந்த மடிப்புடன் தனது தலையணைக்குள் வைத்துக் கொண்டு அன்றிரவு உறங்கினார். மறுநாள் காலை 4மணிக்கு நான் திருகோணமலைக்குச் செல்லத்தயாரானபோது அவற்றைத் தந்தார். அவை அழகாக ஸ்திரி செய்யப்பட்டிருந்தன..

31.5.2002அன்று தீர்ப்புக்காகத் திருகோணமலை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும் 12.6.2002இற்கு மீண்டும் தவணை போடப்பட்டது. எனது சட்டத்தரணி சூசைதாசன் என்னுடன் வந்து கதைத்தார். என்ன செய்வது 12 ஆம் திகதி வரை பொறுத்திருங்கோ என்றார். அன்று மாலையே மீண்டும் அனுராதபுரம் சிறைக்கு அனுப்பப்பட்டேன். (தொடரும்)




மாலை 5மணிக்குப் பின்னர் புலிகள் ஆர்.பி.ஜி குண்டுகளை அடித்தார்கள்.

எமக்குப் பின்னால் இரண்டு படையணிகள் நின்றபோதிலும் காயப்பட்டவர்களை 6கிலோ மீற்றர்களுக்குப் பின்னால் கொண்டுசெல்லவேண்டியிருந்தது. அந்தக் கட்டத்தில் லெப்ரினன் ரணசிங்கவும் வேறு 3 கொமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். லெப்ரினன் ரணசிங்கவின் சடலத்தை இழுத்துக்கொண்டு பின்வாங்கினோம். தரையில் இழுபட்டே பின்வாங்க வேண்டியிருந்தது. புலிகள் தொடர்ந்தும் அடித்ததால் அங்கிருந்த வீடு ஒன்றுக்குள் புகுந்தோம். அந்த வீட்டுக்குள் ஏற்கனவே காயப்பட்ட பல கொமாண்டோக்கள் தஞ்சமடைந்திருந்தார்கள். புலிகளின் தாக்குதலால் அந்த வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. அப்போது குளக் கட்டுப் பக்கம் நின்ற கொமண்டோக்களும் தாக்குதலால் அதிகம் காயப்பட்டிருந்தார்கள். அந்த இடத்தில் மேஜர் கமகே மாட்டியிருந்தார். நம் இரவு 10 மணியளவில் படையினரின் முன்னரங்க நிலைக்குப் பின்வாங்கிச் சென்றோம். அப்போது யார் யார் இறந்தார்கள், யாரெல்லாம் உயிருடன் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. என்றுமே இவ்வாறானதொரு உக்கிர சண்டைக்குக் கொமாண்டோக்கள் முகம் கொடுத்திருக்கவில்லை. இவ்வாறான ஒரு சண்டையை இதற்கு முன்னர் சண்டைத் திரைப்படங்களிலேயே பார்த்திருக்கிறேன்.

காயப்பட்டவர்கள் உடனுக்குடன் பின்வாங்கிச் சென்றிருந்தால் இவ்வளவு இழப்புகள் எமக்கு ஏற்பட்டிருக்காது. ஆளை ஆள் காப்பாற்ற நினைத்ததாலேயே அதிக இழப்புகள் ஏற்பட்டன. மேஜர் சாமந்த கினிமலகே காயப்பட்டபோதிலும் தான் அங்கிருந்து வரமாட்டேன் என்று பிடிவாதமாக இருந்ததால் காயப்பட்ட ஏனையவர்களாலும் பின்வாங்கி வர முடியவில்லை. மிகவும் இறுக்கமான சூழலில், "சேர் என்ன செய்வோம்?" என்று மேஜர் சாமந்த கினிமலகேவிடம் கேட்டேன். அதற்கு அவர், "பின்வாங்கிச் செல்ல விரும்புவோர் போங்கள் நான் வரமாட்டேன்" -என்றார்.

நான் உட்பட இன்னும் 4பேர் மட்டுமே அப்போதுவரை காயப்படாமலிருந்தோம். மாலை 5.30 மணியளவில் மன்னகுளம் கிராமத்துக்குள் புலிகள் ரக்ரரிலும் பஸ் ஒன்றிலும் ஏனைய வாகனங்களிலும் வந்திருந்தார்கள். அவர்களால் எங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏற்கனவே காயப்பட்டு வீட்டிலும் ஏனைய இடங்களிலும் கிடந்த கொமாண்டோக்களைச் சுடுவதைக் கண்டேன். மருத்துவ வசதிகள் இருந்திருந்தால் கூடக் காயப்பட்ட கொமாண்டோக்களில் பலரைக் காப்பாற்ற முடிந்திருக்கும். அவ்வாறு வசதி இல்லாத நிலையிலும் கொமாண்டோக்கள் மன உறுதியுடன் இருந்ததகை கண்டேன். சிலர் எழுந்து நடக்க முடியாத நிலையில் கூட ஊர்ந்துபோய்ச் சண்டையிட்டார்கள். புலிகளிடமிருந்து ஆரம்பத்தில் நாம் கைப்பற்றிய வீட்டில்தான் காயப்பட்டவர்களை வைத்திருக்கிறார்கள் என்பது புலிகளுக்கு நன்கு தெரிந்திருந்தது. இத்தாக்குதலில் புலிகளிலும் பலர் இறந்தார்கள்.

நான் அந்த இடத்திலிருந்து பின்வாங்கி வந்தபோது கொமாண்டோக்கள் பலர் ஆங்காங்கே இறந்து கிடப்பதைக் கண்டேன். கப்டன் சமன் பெரேரா காய்பட்டுக் கிடப்பதைக் கண்டேன். புலிகள் கைக்குண்டுகளை மழைபோல வீசினார்கள். அதனால் காயப்பட்டுக் கிடந்த கொமண்டோக்கள் யாரும் அங்கிருந்து தப்ப முடியவில்லை. அங்கு இறந்துபோன கொமாண்டோக்களின் பிணங்களைக் கூடப் படையினரால் எடுக்க முடியவில்லை.



# "சுவிற்ச்சைப் போடேக்க எனக்கு வாயில வருகுது"

**சின்னக்கிளி**

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை அண்மையில் நடந்து முடிந்தது. அந்தப் பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று பல தரப்பினரும் கெஞ்சிக்கேட்டும் கூட அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. இது விடயத்தில் நீதி மன்றத்தை நாடியபோதிலும் பரீட்சை முடியும் வரை தடையில்லாத மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றம் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. அதன் பின்னர் மின்சாரக் கட்டணத்தை 66 சதவீதத்தால் உயர்த்தித் தடையற்ற மின்சாரத்தை வழங்குவது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறாயின் பரீட்சைக் காலத்தில் மின்சாரத்தை வைத்துக்கொண்டு வஞ்சகம் செய்திருக்கிறார்கள் என்று பலரும் ஆதங்கிக்கிறார்கள். அதிலும் குறிப்பாகப் பெண்கள் குமுறுகிறார்கள். இதை முதலிலேயே செய்திருக்கலாம் தானே... பிள்ளைகள் கொஞ்சம் படிச்சாவது இருக்குங்களே...? என்று திட்டித் தீர்க்கிறார்கள்.

மின்சாரக் கட்டண அதிகரிப்புப் பற்றிய செய்தி வெளியானதும் அது பற்றிக் கருத்து வெளியிட்டட பல பெண்கள் "சுவிட்சைப் போடேக்க எனக்கு வாயில வருகுது" என்று தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறார்கள்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பது வெதுப்பகத் தொழில், அரைக்கும் ஆலை, மின்சாரத்தில் இயங்கும் தொழிற்சாலைகளின் உற்பத்தி ஆகியவற்றின் விலைகளை அதிகம் உயர்த்தியிருக்கிறது. இதைவிட 90 அலகுகளுக்கு உட்பட்ட பாவனையை மேற்கொள்கின்ற மக்களுக்கு சகாயமான ஒரு கட்டண அறவீட்டையோ, மின்சார மோட்டார்களால் விவசாயத்துக்கு நீர் இறைக்கும் விவசாயிகளுக்கு மானியமோ விலைக் குறைப்போ செய்யப்படவில்லை என்பதும் பெருங்குறைதான். ஆனால், அதிக வருமானம் பெறுபவர்கள் வழமையைவிட சற்று அதிகளவில் வரி செலுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவரப்பட்ட விடயத்தல் வரி செலுத்த மாட்டோம் என மின்சார சபை ஊழியர்கள் உட்பட அதிகாரிகள் வர்க்கம் பேராட்டத்தில் இறங்கியுள்ளது. ஏற்கனவே அவர்கள் அனுபவித்த வரப்பிரசாதங்களைப் பொருளாதார நெருக்கடியான காலத்திலும் எதிர்பார்க்கின்றனர். இது சாதாரண மக்களைப் பாதிப்பதாக உள்ளது.

**மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பது வெதுப்பகத் தொழில், அரைக் கும் ஆலை, மின்சாரத்தில் இயங்கும் தொழிற்சாலைகளின் உற்பத்தி ஆகியவற்றின் விலைகளை அதிகம் உயர்த்தியி ருக்கிறது.**



# ஊர் ஊராகக் குறிப்பெடுக்கும் அரசியல்வாதிகள்



விதுரன்

ஒரே மாவட்டத்திலிருந்து இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களும் 2020ஆண்டுத் தேர்தலில் தெரிவானவர்களும் எனத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தேர்தல் வரப்போகிறது என்ற சூழல் வந்தவுடன் ஊர் ஊராகச் சென்று மக்களின் பிரச்சினைகளைக் குறிப்பெடுத்து எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். அத்தோடு மக்களின் கோரிக்கைக் கடிதங்களை வாங்குவது என்று தமது பாரம்பரியக் கலைகளை அழியவிடாது பாதுகாக்கத் தொடங்கியிருக்கின்றனர். தமது பகுதி மக்களுக்கு என்ன பிரச்சிIனைகள் இருக்கின்றன என்று புதிதாக அறிவதில் அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளை விடத் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளே தீவிரம் காட்டி வருகின்றன. எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதாலம் அரசை விமர்சித்து அரசியல் செய்வதாலும் மக்களுக்குத் தேவையான எதையும் செய்து கொடுக்கும் வல்லமை இவர்களுக்கு இல்லை என்றாலும் மக்களின் குறைநிறைகளைப் புதிதாகக் கணக்கெடுக்கத் தொட ங்கியிருக்கிறார்கள். 2020இல் தேர்தல் முடிந்த பின் மக்கள் மத்தியில் இறங்கமுடியாத நிலையில் இருந்த தமிழ்த் தேசிய உறுப்பினர்கள் இதை ஒரு சாட்டாக வைத்துக் களமிறங்கியிருப்பது தெரிகிறது.

**மக்களுக்கு என்ன பிரச்சினை?**

தம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களுக்கு என்ன பிரச்சினையுள்ளது என்று தெரியாத அளவில்தான் இந்த உறுப்பினர்கள் உள்ளனர். தேர்தலின் பின் மக்கள் மத்தியில் இறங்கவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. மக்கள் ஏற்கனவே அவர்களைத் தெரிவு செய்தது அபிவிருத்தி விடயங்களுக்காக அல்ல. உரிமையைப் பெற்றுத் தருவதற்கே. தற்போது அவர்களால் அதுவும் முடியாமல்போயுள்ளது. அரச சார்பு உறுப்பினர்களுக்குப் போட்டியாக அபிவிருத்தி விடயங்களைப் பெற்றுக்கொடுக்கத் தமிழ்த் தேசிய உறுப்பினர்களால் முடியாமல் போனதால் மூக்குடைபட்ட நிலையில் உள்ளூராட்சி மன்றங்களைத் தக்க வைக்கத் துடிப்பது தெரிகிறது.

**தமது தேவைக்கு அரசை நாடும் அரசியல்வாதிகள்**

தற்போது தேர்தலைச் சாட்டாக வைத்து மக்களைச் சந்திக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் சிங்கள அரசையும் சிங்களத் தலைவர்களையும் அவர்களுடன் சேர்ந்து அரசியல் செய்யும் தமிழரையும் எப்போதும் குறைகூறுவதால் தமிழ் மக்கள் இவர்களிடம் எதையும்

**வசதியானவர்களுக்கு வாய்ப்பு**

காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் தகவல் தொழில் நுட்ப விடயத்தில் வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிபவர்களாக இருந்தார்கள். அவர்களது தொழில் அலுவலகத் தேவைகளுக்குத் தடையற்ற மின்சாரம் அவசியமாக இருந்தது. அது கிடைக்காத நிலையிலேயே கோட்டாபய அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். தற்போது கிளர்ச்சி செய்தவர்களுக்குத் தடையற்ற மின்சாரம் கிடைத்திருக்கிறது. அவர்களைப் பொறுத்த வரை மின் கட்டணம் உயர்வு ஒரு பொருட்டில்லை. 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் தேவை என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. மின்சாரக் கட்டணம் 66 வீதத்தால் அதிகரிப்புச் செய்யப்படவுள்ளது என்று அறிவித்தபோது காலிமுகத்திடல் கிளர்ச்சியாளர்கள் கிளர்ந்தெழவில்லை. தமக்கு 24 மணிநேரமும் மின்சாரம் கிடைக்கப் போகிறது என்ற அளவில் திருப்தியடைந்தார்கள். அதற்கு அப்பால் அரசில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை. பெரும் பணக்காரர்களைப் பொறுத்தவரையிலும் தமக்குத் தடையற்ற மின்சாரம் கிடைத்தால் போதும் என்ற நிலையே காணப்படுகிறது. அடிமட்ட, வருமானம் குறைந்த மக்கள் மட்டுமே இதனால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்குமிழ்களுக்குரிய ஆளிகளை அழுத்தும்போது இந்த மாதத்துக்குரிய மின் கட்டனம் அதிகம் வரப்போகிறது என்ற பயம் மனதில் ஒட்டிக் கொள்கிறது. தகாத வார்த்தைகளில் அரசையும் அமைச்சர்களையும் பேசுகின்றனர்.

கேட்க வாய்ப்பிருப்பதில்லை. ஆனால் மக்களுக்குக் கதை சொல்லும் இந்த அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் விடயங்களை, பிரச்சினைகளை ஆட்சியாளர்களுடன் சேர்ந்து அல்லது விட்டுக்கொடுப்புகளைச் செய்து மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவில்லையே தவிர தமது சொந்தத் தேவைகளுக் காக இரகசியமாக அரசதலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள் எனச் சந்தித்து முடித்துக் கொள்ளப் பின்னிற்பதில்லை.

மகிந்தராஜபக்ச அரசதலைவராக இருந்தபோது தனது மருமகனுக்கு (இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த அவர் தற்போது இறந்துவிட்டார்) வேலை தேடித் தருமாறு மகிந்தவிடம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேட்டார் என்றும் அதனால் சென் னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மகிந்த அவருக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றும் கதைகளுண்டு.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் சி.வி.கே. சிவஞானம் தனது மகளின் இடமாற்றம் தொடர்பில் உதவிகோரினார் என்றும் சொல்லப் படுகிறது.

நாமல் ராஜபக்ச ஒரு தடவை நாடாளுமன்றத்தில் வைத்து நாடா ளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர் மலநாதனைப் பார்த்து நீங்கள் உங்கள் வியாபார நடவடிக்கைகளுக் காக அப்பாவை அடிக்கடி சந்திக்க வருவீர்கள் அடுத்த தடவை வரும் போது அம்பாறை மாவட்ட உறுப்பி னர் கலையரசனையும் அழைத்து வாருங்கள் என்று வெளிப்படையா கவே கூறினார்.

## செல்வராசா கஜேந்திரன் இலங்கைக்கு வந்து அப்போது பாதுகாப்புச் செயலவிருந்த கோட்டாபய ராஜபக்சவிடம் பேசித் தனது சகோதரரை விடுவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் செயலரும் நாடாளுமன்ற உறுப் பினருமான செல்வராசா கஜேந்தி ரனின் சகோதரர் ஒரு தடவை கைது செய்யப்பட்டார். வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருந்த செல்வராசா கஜேந்திரன் இலங்கைக்கு வந்து அப்போது பாதுகாப்புச் செயலவி ருந்த கோட்டாபய ராஜபக்சவிடம் பேசித் தனது சகோதரரை விடுவித் தார். நாட்டின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த பலர் போர் முடிந்து 13 ஆண்டுகள் கழிந்தும்கூட அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் இன்றும் வாடுகின்றனர். அதுபற்றி அவர் ஏதாவது பயனுள்ள விடயங்கள் செய்ததாகத் தெரிய வில்லை. அதேபோல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணப வன் தனது மகளின் பிறந்தநாளன்று அப்போதைய அரசதலைவர் மைத்திரி பாலவைத் தனது வீட்டுக்கு அழைத்துக் கேக் வெட்டி மகிழ்ந்தார். மேற்கூறப்பட்டவை தமது சொந்தத் தேவைகளுக்காகத் தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்கள் செய்தவை.



யாழ்ப்பாணத்தில் வர்த்தக் கண் காட்சியை ஒருதடவை தொடங்கி வைத்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் முதலீடு களை மேற்கொள்ள வெளி நாடுகளில் இருந்து முத லீட்டாளர்களை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூட்ட மைப்பு உறுப்பினர்களே பல கோடி ரூபா முதலீடுக ளைச் செய்யும் வல்லமை யுடன் இருக்கிறார்கள் என்றும் சொன்னார். அப் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அந்த மேடையில் இருந் தார்.

தமிழத் தேசியம் பேசித் திரியும் இந்த உறுப்பினர்க ளுக்குத் தமது மாவட்டங் களில் போர் காரணமாக எத்தனைபேர் இறந்தார்கள் என்றோ இறுதிப் போரில் எத்தனைபேர் இறந்தார்கள் என்றே கூடத் தெரியாது. அதற்குரிய பட்டியல் கூட 13 ஆண்டு காலப் பகுதியில் தயாரிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால், தேர்தல் ஒன்று வரப்போகிறது என் றதும் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று புதிதாகக் கேட்டுக் குறிப்பெடுத்துக்கொள்ள முண்டி யடிக்கிறார்கள். இது வெறும் பித்த லாட்டம்.

கதிரேசன் காத்தவராயன்



# இதுகளை என்னவெண்டு சொல்லுறது?

வாசிகசாலையடிக்குப் போவமெண்டு போக அதிலை ஆலடியிலை முருகேசரும் சங்கரியரும் கதைச்சுக் கொண்டிருந்தினம். என்னைக் கண்டிட்டு கூப்பிட்டினம். போனன். எதிர்ப்பக்கத்தாலை கனகர் வந்து சேந்தார். நிழல்தானே அதிலையே இருந்துகொண்டம்.

'என்னப்பா முருகேசு கதை வலு சுவாரசியமாப் போகுதுபோலை...?' எண்டு நான் தொடங்கினன். 'அதோ? திரும்பவும் போராட்டம் தொடங்கியிருக்கல்லே... அதுதான்...'எண்டு சங்கரியர் சொல்லிக்கொண்டிருக்க 'ஏனப்பா சங்கரி நீயும் போகப் போறியோ?' எண்டார் கனகர். நாங்கள் சிரிச்சம். 'விலையள் போகிறபோக்கு...கறன்ற்காசு அப்பிடி.... வாழுகிறது எப்பிடி?' எண்டார் பெருமூச்சோடை முருகேசர்.

'உண்மைதான்... ஆனால் அதுக்காக இருக்கிற பொருளாதாரம் இன்னமுமல்லே கீழையாகப்போகுது?' எண்டு சலிச்சார் சங்கரியர். 'அதுகும் சரிதான்... ஆனால் எதிர்ப்பைக் காட்டவல்லே வேணும்... எதிர்ப்பு எண்டில்லாட்டிலும் எங்கடை நிலையைச் சொல்லத்தானே வேணும்?' எண்டார் கனகர். 'எங்கடை பாதிப்புகளை இன்னுமின்னும் கூட்டாதமாதிரி வேறை ஏதாலும் முறையிலை போராடுறதைப்பற்றி யோசிக்கவேணும்... நெடுகவும் இப்பிடியே செய்யிறதைத் தவிர்க்கலாமில்லே?' எண்டு நான் சொன்னன்.

'உண்மைதான் யப்பானிலை போக்குவரத்துத் தொழிலாளியள் தங்களுக்கு சம்பள உயர்ச்சி கேட்டு போராடினகதையொண்டு கேள்விப்பட்டனான்... என்ன செய்தாங்கள் தெரியுமே? அரசாங்கத்தைக் கேட்டுச் சரிவரயில்லை...போராட்டம் செய்ய அவகாசம் குடுத்தும் பயனில்லை...அவங்கள் வீட்டிலை நிக்கேல்லை... பஸ், றெயின் எண்டு எல்லாத்திலையும் பணயம் செய்தவையிட்டை காசு கேக்காமல் ஏத்தியிறக்கத் தொடங்கினாங்களாம்... அரசாங்கம் உடனடியாவே பேச்சுவார்த்தைக்குக் கூப்பிட்டுத் தீர்வு குடுக்கவேண்டி ஏற்பட்டுதாம்' எண்டார் முருகேசர்.

'அது யப்பான் அரசாங்கம்... இது இலங்கையரசாங்கம்.... எம்பிமார் அமைச்சர்மார் பெரிய அதிகாரியள் எல்லாரும் குடும்பம்குடும்பமாய் சுற்றுலாப் போவங்கள்...சிலவில்லையல்லே?' எண்டு நான் சொல்ல 'சரியாத்தான் சொன்னியள் கதிரேசண்ணை' எண்டு உற்சாகமானார் சங்கரியர். 'எங்கடையாக்களும் கஸ்ரப்படுகிறசனத்தை இன்னமின்னம் கஸ்ரத்துக்குள்ளை கொண்டு போகிற வேலையளை நிப்பாட்ட யோசிக்கவேணும்... சனம் கஸ்ரப்பட்டால்தான் அரசாங்கத்துக்கெதிராய் ஒண்டாகுங்கள் எண்டிற நினைப்பைக் கைவிடவேணும்' எண்டார் முருகேசர்.

'உதுக்குள்ளை இடையிலை ஒரு கதையுமல்லே காதிலை விழுந்துது... பெருந்தொகையிலை சம்பளமெடுக்கிறவை ரக்ஸ் கூட எண்டிற போராட்டத்துக்கு மட்டுமட்டான சம்பளமெடுக்கிற ஆக்களையுமல்லே பாவிக்கினமாம்...எனி பெரிய இடங்களெண்டதாலை தாங்களாயே ஆதரவளிக்கவும் வெளிக்கிடுகினமாம்...' எண்டார் கனகர். 'உண்மைதானே... உதுகள் அடிப்படைத் தேவையளோ? எது முக்கியமெண்டிருக்கல்லே...' எண்டன் நான்.

'அரசாங்கத்தைக் கொண்டு நடத்துகிறவை.. அவையைக் காவித்திரியிறவையெண்டு இருக்கினமல்லே அவையளுக்கு நேரடியாப் பாதிப்பு வாற மாதிரி அல்லது அரியண்டப்படுகிறமாதிரி என்னவாவது செய்யிறதைப்பற்றி யோசிக்க வேணும்...'






# பாற் சுறாவறை

சுறா மீனில் கறி ஆக்கி உண்பதைவிட வறை ஆக்க உண்பதே அதிக ருசிக்குரியதாக இருக்கிறது. அதிலும் பாற்சுறா வறைக்கு உகந்த ஒன்றாகப் பலராலும் விரும்பப் படுகிறது. மகப்பேற்றுக்குப் பின்னர் பாலூட்டும் தாய்மாருக்குப் பாற்சுறாவில் வறை செய்து உண்ணக்கொடுக்கும் பழக்கம் கரையோரச் சமூகத்தில் பரவலாக இருந்துவருகிறது. பாற்சுறா வறையை உண்பதன்மூலம் தாய்க்குப் பால் அதிகம் சுரக்கும் என்கிறார்கள் மூதாதையர்கள். அந்த வகையில் சுறா வறை அதிகம் முக்கியத்துவம் பெறுகிறது. பாற்சுறாவை விடவும் ஏனைய சுறாக்களில் கூட வறை ருசி யானதாவே இருக்கிறது. இதனால் இந்த வாரம் சுறா வறையை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையானவை...!**

பாற் சுறா மீன் துண்டுகள் 1 கிலோ.
சின்ன வெங்காயம் - 50 கிராம்
செத்தல் மிளகாய்கள் - 3அல்லது 5
மஞ்சள், மிளகு, சீரகத்தூள் - தலா ஒரு தேக்கரண்டி
கடுகு, உப்பு, கறிவேப்பிலை - தேவைக்கேற்ப
நல்லெண்ணை

**வறுத்தெடுக்கும் முறை**

பாற் சுறா மீனை வெட்டித் துப்புரவு செய்து நன்கு கழுவிய பின்னர் சட்டி ஒன்றுக் குள் நீர் விட்டுச் சிறிது உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து நன்கு அவித்தெடுக்க வேண்டும். அவித்த பின்னர் வறை வறுக் கும் தாச்சியை அடுப்பில் வைத்துச் சிறிதளவு எண்ணை விட்டுக் கடுகு, கறிவேப்பிலை போட்டுச் சூடானதும் அவித்த பால் சுறாத் துண்டுகளைப் போட் டுப் பிசைந்து நறுக்கிய வெங் காயம், செத்தல் மிளகாய்க ளைப் போட்டுச் சிறிது நேரம் மூடி அவிக்க வேண்டும். பின்னர் மஞ்சள்தூள், சீரகத்தூள், மிளகு, உப்புப் போட்டு நன்கு பிசைய வேண் டும். கலவையை நன்கு பிசைந்து வறுத் தெடுக்கவேண்டும். ருசி மிகுந்த சுறாவறை தயாராகிவிடும்.



எண்டார் முருகேசர். 'சனத்தின்ரை இயல்பு பாதிக்காமல் எதையெண்டாலும் செய்யலாம் எண்டிறியளோ?' எண்டார் சங்கரியர். 'ஓமோம்... அவை தங்கடை அலுவலுகளிலை முன்னுரிமைச் சலுகையளைல்லே அனுபவிக்கினம்? சனத்தோடை சனமாய் வரிசையிலை வாங்கோ எண்டு இருத்திவைச்சாலே கனக்கப் பிரச்சனை தீரும்' எண்டு கனகர் சொல்லிக்கொண்டிருக்க 'இடமாத்தங்கள் விசாரணையள் எண்டு புதிசு புதிசாய் பிரச்சனையள் கிளம்பாதெண்டு நினைக்கிறியளோ?' எண்டார் சங்கரியர். 'போராடுகிறவனை ஒராளெண்டாத்தானே பழிவாங்கலாம்... ஒட்டுமொத்தமாய் எல்லா இடங்களிலையும் செய்தால் எத்தினை பேருக்குக் கஸ்ரம் குடுப்பினம்?' எண்டார் கனகர். 'கனக்கத்தேவையில்லை முந்தி பெரியவற்றை வீட்டுக்கு கறன்ற், தண்ணி அதுகளைக் கட் பண்ணினமாதிரி யோசிக்கலாமல்லே?' எண்டு எங்களைப் பாத்தார் முருகேசர். 'எங்கடையாக்க ளிட்டைத்தான் கூட்டுப் பொறுப்பெண்டது இல்லையே? ஒற்றுமையா என்னத்தைச் செய்தாலும் அது வெற்றியாகும்... ஆனால் எதையெண்டாலும் கூடிக் கதைச்சு ஒற்றுமையாய்ச் செய்திருக்கிறமோ? அப்பதான் சரிவரும்' எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.

# ஏன்...?

நட்சத்திரா

# அப்டி...?

46



## தடை விதிக்கப்படாவிடினும் பீடி இலைகளைக் கடத்துவதேன்...?

பீடி இலைப் பொதிகளுடன் கைதாகின்றவர்கள் தொடர்பான செய்திகள் நாளாந்தம் வெளிவந்தவண்ண முள்ளன. ஆனால் பீடி இலையோ இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு பொருளல்ல. தடைசெய்யப்படாத பீடி இலைகளை ஏன் கடத்தி வருகிறார்கள்....? தடை செய்யப்படாத அவற்றைக் கடத்தி வருவதன் நோக்கம் - லாபம் என்ன...?

றெண்டு என்கிற மரத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்படும் ஒரு வகைத் தடித்த இலையே பீடி சுற்றப் பயன்படும் பீடி இலைகள் ஆகும். இதன் விஞ்ஞானப் பெயர் டய யோஸ் பெரஸ் மெலனொக் சிலோன் என்பது. இந்தியா வின் மலைப்பாங்கான தென்கிழக்குப் பிராந்தியங்களான ஒடிசா, ஜார்கண்ட், அஷாம், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கான ஆகிய பகுதிகளிலேயே இது அதிகம் விளைகிறது. இந்தப் பிரதேச மக்கள் இந்த பீடி இலை மரத்தை ரெம்புறுணி என்று அழைக்கின்றனர்.

இந்த பீடி இலைகளைப் பிடுங்கிப் பத்து நாள்கள் வரை வெயிலில் காய வைத்து பதப்படுத்துகிறார்கள். அவை பீடி சுற்றுவதற்கு ஏற்றவாறு பொதி செய்யப்படுகின்றன. இந்த பீடி இலைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டவை அல்ல. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவற்றைச் சட்ட பூர்வமாகக் கொண்டுவரும் ஏற்பாடுகள் இருக்கிற போதிலும் அதற்கான சுங்க வரி அதிகமாக அறவிடப்படு கிறது. ஒரு கிலோவுக்கு 3ஆயிரம் ரூபாவுக்கு மேல் அற விடப்படுகிறது. இதனால் இந்த வரியைத் தவிர்ப்பதற்காக பீடி இலைக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள். இதனால் இந்தியாவிலிருந்து கடல்வழியாக பீடி இலைகள் கடத் தப்படுகின்றன.

அரசு பீடி இலைக்கான சுங்க வரியை மிகக் குறை வாக்கினால் பீடி இலைகள் அளவு கணக்கின்றி அனைவ ராலும் இறக்குமதி செய்யப்பட்டுப் பீடிப்பாவனை சாத ரண மக்கள் மத்தியில் மிக அதிகமாகிவிடும். இதனால் வறுமை, குடும்பப்பொருளாதார நலிவு, புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகரிக்கும். இவற்றைத் தடுக்கும் கட்டுப்பாடாகவே அதிக சுங்க வரி நடைமுறையில் உள்ளது. இந்த அதிக சுங்க வரியைத் தவிர்ப்பதற்காகவே தடை செய்யப்படாத பொருளைக் கடத்திக் கொண்டுவருகிறார்கள்.

# 100

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

தேடல் என்பது அதுவும் என்னையறிவதற்கான தேடல் என்பது எனக்கு வெளியேதான் நிகழ்த்தப்படுகிறது. நான் யார்? என்கிற ஒரு வினாவை உண்மையுடன் எப்போதாவது கேட்டிருக்கிறோமா? கேட்டிருப்போம் எம்மிடமல்ல பிறரிடம் மட்டுமே. என்னை நான் அறிந்துகொள்ள எனக்கு வெளியே தேடுகிறேன். என்னைப் போலவே தன்னையறிவதில் தவறிழைக்கும் ஒருவன் என்னை எப்படி அறிவான்? நான் என்னையறிய எனக்குள்ளாக என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறேன்? எனக்கு வெளியே என்னென்ன செய்திருக்கிறேன்? தவறுகள் என்ன? நிறைவுகள் என்ன? எப்போதாவது சிந்தித்துள்ளோமா?

என்னை அறிதல் எனுமொரு செயல்முறைக்காக ஒரு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவது அவசியமானது. அந்த நேரமென்பது எப்போது வேண்டுமாயினும் பயன்படுத்தத் தக்கவகையில் இருக்கவேண்டும். நேரம் சுயாதீனமாகப் பயன்படுத்தப்படல் வேண்டுமென்பத முக்கியமானது. நேரத்தைக் குறித்தொதுக்குதல் என்பதானது சிந்தனைக்கான நெகிழ்வுத்தன்மையை இழப்பதனூடாக மனம் தன்சுயாதீனமான இயங்குதிறனை இழந்து வெறுமனே இயந்திரமாகவோ கணனிப்பொறி போன்றோ நியம இயக்கத்துள் முடங்கிப்போய்விடும்.

எப்பொழுதெல்லாம் நான் என்கிற எனது இயலுமை எதிர் இயலாமை பற்றிய மதிப்பீடொன்றைச் செய்ய வாய்ப்புகள் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளப் பழக்கப்படுத்த வேண்டும். இந்த மதிப்பிடலானது எனதான செயற்பாடுகளுக்கூடானதாகவே நிகழ்த்தப்படுவது அவசியமானது என்பதை மறக்கவே கூடாது. பிறனொருவன் வேறு நான் வேறு என்பது கட்டாயமாக நினைவிலிருக்க வேண்டும். பிறனொருவன் அல்லது எனக்கு வெளியான ஒன்றுடனானது ஒருபோதுமே மதிப்பிடலாக அமையாது. மாறாக வெறும் ஒப்பிடலாக மட்டுமே அது இருந்துவிடும்.

அவ்வாறாகவே எனது இயலுமை மற்றும் இயலாமைகளைக்கொண்டு பிறரையும் மதிப்பிடமுடியாதென்கிற உண்மையையும் கவனத்தில் எப்போதும் வைத்திருப்பது அவசியமானது. ஒப்பிடலினது பெறுதிகள் ஒருபோதும் நியமமாக இருந்துவிடப்போவதில்லை. அது முன்னர் பேசியது போல அக மற்றும் சூழல் சார்ந்ததாகவே இருக்கும். எனக்கான நியமம் நானேதான். அவனுக்கான நியமம் அவனேதான். ஒன்றுடனொன்றை ஒருபோதுமே பொருத்த முடியாது.

நான் என்று குறிப்பபடப்படுகிற நானே ஒரு மாறிதான். எனக்குள்ளான காரணிகள்கூட மாறலாம் என்பதை என்பதை ஏற்றுக்கொள்ள தயாராகவேண்டும். எந்தவொன்றும் எப்போதும் அப்படியேதான் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதும் மாற்றம் சாதகமாக இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பதும்தான் நாம் விடுகின்ற பெருந்தவறு. நான் நானாகவே இருக்க வேண்டுமென எண்ணுவது தவறில்லை. எனக்கானவை என்று குறித்து வைத்திருப்பவை மாறக்கூடாது என்று பிடிவாதமாயிருப்பதுதான் தவறு. அது நிம்மதி என்கிற ஒன்றை அணுகவிடாது.

இப்போது எதைத் தேடியலைகிறோம்? அமைதியை, நிம்மதியை. ஒருவிதமான சுயாதீனத்தை என நீளமாக வேறுவேறான பெயர்களால் அறியப்பட்ட ஒன்றையே தேடியலைகிறோம். விளக்கை ஏற்றிக் கைகளில் சுமந்துகொண்டு விளக்கைத் தேடுகிற புத்திசாலித்தனம் எங்களிடம் மட்டுமே இருக்கிறது. கைகளில் அதாவது எம்மிடமிருப்பதையறியாது அதையே தேடியலைகிறோம். எப்படிக் கிடைக்கும்? அதுவும் தேவைக்குப் பயன்படுகிற விதமாக எப்படிக் கிடைக்கும்? எம்மிடமிருப்பவற்றைப் பட்டியலிடுவதற்குப் பதிலாக எம்மிடமிருப்பதை உணர்ந்துகொள்ளாது இல்லை யென்கிற முடிவிற்கு வந்துவிடுகிறோம். இல்லையென்று நிச்சயமாகிவிட்டால் அதை அடைந்தகொள்வதற்கான வழிகளை தேடாது விட்டுவிடுகிறோம். இருக்கிறவற்றை முழுமையாக பயன்படுத்துகிறோமா? என்கிற ஆராய்ச்சியை எப்போதாவது செய்ததுண்டா? ஒன்று ஒருபொதுமே இன்னொன்றாக முடியாது. ஆனால் பதிலீடாக அமைந்து கொள்ளும் அல்லது அமைத்துக் கொள்ள முடியும்.

இது நிம்மதிக்கான இரகசியம் என்றுகூட சொல்ல முடியும். முயற்சி. ஈடுபாடு, திட்டமிடல் மற்றும் செயல்முனைப்பு என்பவை பதிலீட்டை மேற்கொள்வதனூடாக முன்னெடுக்கப்படுமாயின் இல்லையென்கிற தடையைத் தகர்த்து முன்னகரமுடியும். இதற்காக ஏராள மான உதாரணங்களை கண்டுள்ளோம். முக்கியமாக மாற்றுத்திறனாளிகளைக் குறிப்பிடமுடியும். அவர்களிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம்.

நிம்மதி என்பது எமக்கு வெளியே இல்லை. நாம் கண்டுபிடிக்கவும் அனுபவிக்கவும் தவறவிடுகிறோம் என்பதுதான் பிரச்சனையே. எமக்குள்ளேதான் எல்லாம் நிறைந்துள்ளன. கண்டுபிடிப்போம். அதற்காக எம்மையறிவோம். சந்தனைக்கு முடிவில்லை. வினாக்களுக்கும் பஞ்சமில்லை. கண்டடைவோம்.

உரையாடலை எமக்குள்ளாகத் தொடர்வோம்.

*இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781*